(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE** **22 UTM 614**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி ) பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2025

பி.ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 50

ஆறாவது பருவம் நேரம் : 3 மணி நேரம்

பகுதி – 3

*சங்க இலக்கியம் – பத்துப்பாட்டு*

பகுதி – அ **(10x1=10** மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. *திருமுருகாற்றுப்படை சுட்டும் 'குறடு' என்பது……….*

   *அ) செங்காந்தள் ஆ) குவளை இ) ஈட்டிமரம் ஈ) சந்தனமரம்*

2. *'யாணர்' என்பது…………*

   *அ) யவனர் ஆ) மிலேச்சர் இ) புதுவருவாய் ஈ) கதுப்பு*

3. *பத்துப்பாட்டில் மிகச்சிறியது எது?*

   *அ) குறிஞ்சிப்பாட்டு ஆ) சிறுபாணாற்றுப்படை இ) பொருநராற்றுப்படை ஈ)முல்லைப்பாட்டு*

4. *"மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை" என்று தொடங்கும் பாடல் எது?*

   *அ)முல்லைப்பாட்டு ஆ)குறிஞ்சிப்பாட்டு இ)பெரும்பாணாற்றுப்படை ஈ)சிறுபாணாற்றுப்படை*

5. *'வஞ்சிநெடும்பாட்டு' என்ற சிறப்பிற்குரிய நூல் எது?*

   *அ) திருமுருகாற்றுப்படை ஆ) குறிஞ்சிப்பாட்டு இ) பட்டினப்பாலை ஈ) முல்லைப்பாட்டு*

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. *திருமுருகாற்றுப்படையில் இடம்பெறும் 'தெய்வ உத்தி' எனும் தலைக்கோலம் குறித்துக் சிறு குறிப்புரைக்க.*

7. *பட்னப்பாலை கூறும் 'தொழுகொடி' என்பது யாது ?*

8. *உமணர் - குறிப்புரைக்க.*

9. *"அரவுரியன்ன அறுவை" – குறிப்புரைக்க.*

10. *'சேணோன்' – குறிப்புரைக்க.*

**பகுதி – இ** (5 x 3 = 15)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும்.** (K3)

11. **அ)** *திருமுருகாற்றுப்படை பேய்மகளைக் காட்சிப்படுத்தும் திறத்தை வருணிக்க.*

    **(அல்லது)**

    **ஆ)** *திருப்பரங்குன்றத்தில் குமரவேள் வீற்றிருக்கும் நிலையைத் திருமுருகாற்றுப்படையின் வழிநின்று சுட்டுக.*

12. **அ)** *சிறுபாணாற்றுப்படை சுட்டும் விறலி வருணனையின் நுட்பத்தை எழுதுக.*

    **(அல்லது)**

    **ஆ)** *"எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்" எனும் சிறுபாணாற்றுப்படை வரியினை விரித்துரைக்க.*

(த.பி.பா.)

***ETHICAL PAPER***

13. அ) பொருநராற்றுப்படை கூறும் 'பாலை யாழின்' வருணனையினை எழுதுக.

(அல்லது)

ஆ) 'பாடினியின்' கேசாதிபாத வருணனையைப் பொருநராற்றுப்படையின் வழிநின்று மதிப்பிடுக.

14. அ) வளம்நிறைந்த புகார் நகரத்துத் தெருக்கள் குறித்துப் பட்டினப்பாலையின்வழி விளக்குக.

(அல்லது)

ஆ) புகார் நகரத்து மக்கள் இரவில் துயில்கொள்ளும் நிலையினை எழுதுக.

15. அ) குறிஞ்சிப்பாட்டிலுள்ள தினைப்புனம் காக்கும் குறிப்பினைச் சுட்டுக.

(அல்லது)

ஆ) முல்லைப்பாட்டில் இடம்பெறும் பாசறையின் கட்டமைப்பினை விளக்குக.

## பகுதி – இ (5 x 5 = 25)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும்.** (K4 & K5)

16. அ) திருமுருகாற்றுப்படை சுட்டும் 'குமரவேளின்' உருவச் சிறப்பினை மதிப்பாய்க.

(அல்லது)

ஆ) சூரர மகளிரின் தோற்றம் மற்றும் செயல்பாட்டினைக் கட்டுரைக்க.

17. அ) நல்லியக்கோடனின் இயல்புகளைச் சிறுபாணாற்றுப்படையின் வழிநின்று விரித்துரைக்க.

(அல்லது)

ஆ) சமூகவியல் நோக்கில் சிறுபாணாற்றுப்படையினை ஆராய்க.

18. அ) கரிகாற் பெருவளத்தானின் விருந்தோம்பல் பண்பினைப் பொருநராற்றுப்படையின்வழி கட்டுரைக்க.

(அல்லது)

ஆ) அலைகுடி மக்களின் வாழ்வியலைப் பொருநராற்றுப்படையின்வழி விரித்துரைக்க.

19. அ) பட்டினப்பாலை கூறும் பண்டையத் தமிழரின் வணிகக் கூறுகளைக் கட்டுரைக்க.

(அல்லது)

ஆ) புகார் நகரில் மிளிரும் பலவகைக் கொடிகளின் குறியீட்டு நிலையைப் பட்டியலிடுக.

20. அ) தலைவியின் ஆற்றாமையை முல்லைப்பாட்டின்வழி கட்டுரைக்க.

(அல்லது)

ஆ) குறிஞ்சிப்பாட்டில் வெளிப்படும் குறிஞ்சிநில வாழ்வியலை விரித்துரைக்க.



*********